# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 03/மா/2026**

நாள்: 27.05.2026

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி
(2) கட்டிட உரிமையாளர்
வசந்தம் சூப்பர் மார்க்கெட், மதுரை --- எதிர்மனுதாரர்கள்

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 05.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.10.2023 அன்று பெறப்பட்டு 03/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 05.10.2023 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) கூடல் நகர் (சாந்தி நகர்) பாலமேடு மெயின்ரோடு கதவு எண் 48ல் உள்ள வசந்தம் சூப்பர் மார்க்கெட் (Vasantham Hyper Mart) கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் சட்டத்திற்கு விரோதமாக கட்டப்பட்டுள்ளது. தரைதளம் மற்றும் முதல் மாடியை கொண்ட இக்கட்டிடத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking spaces) இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் சூப்பர் மார்கெட்டுக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனத்தை சாலையில் நிறுத்துவதனால் போக்குவரத்து நெரிசல் கடுமையாக ஏற்பட்டு வருகிறது. மேலும், இக்கட்டிடம் அரசுக்கு சொந்தமான 10 அடிக்கும் மேல் உள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடத்திற்கு அவசரகால வழி (Emergency Exit) விடாமல் சட்டவிரோதமாக கட்டடம் கட்டப்பட்டும், மேலும் கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (setback spaces) விடாமல் கட்டடம் கட்டப்பட்டும் இக்கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன் கீழ் வருவாய் துறையிடம் அனுமதி பெறாமலும் மற்றும் இதர துறைகளிடம் உரிய அனுமதி பெறாமல் சட்டத்திற்கு எதிராக கட்டப்பட்ட வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி 21.09.2023 தேதியில் பதிவு தபாலில் (RT75886899IN) மண்டலம் 2 (வடக்கு) மாநகராட்சி உதவி

செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களுக்கு புகார் மனு அனுப்பியிருந்தும் இதுநாள்வரையிலும் நடவடிக்கை எடுக்காத உரிய அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

எனவே மேற்படி வசந்தம் சூப்பர் மார்க்கெட் (VASANTHAM HYPER MART) கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் 10 அடிக்கும் மேற்பட்ட அரசு இட,த்தை ஆக்கிரமிப்பு செய்தும் அவசரகால வழிவிடாமலும், அரசு விதிகளின்படி கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (setback spaces) விடாமலும் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமலும் (Parking spaces) சட்டவிரோதமாக கட்டப்பட்ட வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடத்தை அரசாணை எண் 07 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 10.1.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படி, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57ன் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.12.2023 நாளிட்ட கடிதம் மற்றும் 21.01.2026 நாளிட்ட அறிவிப்பு ஆகியவற்றின் மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம்–2–ன் உதவி ஆணையாளர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான மதுரை, வசந்தம் சூப்பர் மார்க்கெட் அமைந்துள்ள கட்டிட உரிமையாளர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையர் தனது 02.04.2026 நாளிட்ட கடிதத்தில், மதுரை மாநகராட்சியில் சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் பணிகளுக்கான அத்தியாவசிய பணிகள் பார்க்கப்பட்டு வருவதால் 07.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளது எனவும், சட்டமன்ற தேர்தல் பணிகள் முடிவடைந்த பின்னர் மாற்று தேதியினை தெரிவிக்கும் பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு தொடர்பான விசாரணையில் கலந்து கொள்ளப்படும் என் தெரிவிக்கப்பட்டது.

5. மேலும் மனுதாரரும் தன்னுடைய 06.04.2026 நாளிட்ட மின்னஞ்சலில்,, தனது தாய் மாமா இறைவனடி சேர்ந்து விட்டதால் 07.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக முடியாததால், மற்றொரு தேதிக்கு மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

6. எனவே, மனுதாரரின் மேற்கண்ட மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம்–2–ன் உதவி ஆணையாளர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான மதுரை, வசந்தம் சூப்பர் மார்க்கெட் அமைந்துள்ள கட்டிட உரிமையாளர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.05.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. இந்நிலையில், மதுரை மாநகராட்சி மண்டலம்–2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 19.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு எண் 2, கதவு எண் 48. பாலமேடு மெயின்ரோடு. கூடல் நகர், வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடமானது அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டியுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு மாநகராட்சியில் அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3–ன் கீழ் 10.02.2026–ல் கட்டிட உரிமையாளர் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு விதிகள் 2022–ன் கீழ் மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு விதிகள் 2022, கீழ் Form II அறிவிப்பு அனுப்பப்பட்டு 02.04.2026 அன்று கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது. நேராய்வின்போது மாநகராட்சியிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் பெற்ற வரைபடத்திற்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. எனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, கீழ் Form IV அறிவிப்பு 10.04.2026–ல் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும், கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56(2-A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் சிறப்பு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அவர்களுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட மனுதாரரின் மேல் முறையீடு விண்ணபத்தின் மீது அரசிடமிருந்து உத்திரவு பெறப்பட்ட பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது."

8. மனுதாரர் 20.05.2026 அன்று தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

9. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் இளநிலைப் பொறியாளர் (திட்டம்) 20.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகரட்சி, மண்டலம் 2, கூடல் நகர் வார்டு எண் 2, பாலமேடு மெயின்ரோடு கதவு எண் 48ல் அமைந்துள்ள வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அக்கட்டிடத்திற்கான அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3–ன் கீழ் 10.02.2026 நாளிட்ட அறிவிப்பு கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு விதிகள் 2022–ன் கீழ் Form II 02.04.2026 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது.

| வணிக கட்டிடத்தில் அனுமதி வழங்கியது | அனுமதிக்கு மாறாக கட்டியது | கூடுதலாக கட்டியது |
|---|---|---|
| தரைத்தளம் 1400 சதுரடி | தரைத்தளம் 2736 சதுரடி | தரைத்தளம் 1336 சதுரடி |
| | மிட்லெவல் 2136 சதுரடி | மிட்லெவல் 2136 சதுரடி |
| முதல் தளம் 533 சதுரடி | முதல்தளம் 245 சதுரடி – Headroom | --- |

நோய்வின்போது மாநகராட்சியிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் பெற்ற வரைபடத்திற்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு, 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும், கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56(2-A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு விதிகள் 2022ன்–படி Form IV, 10.04.2026 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு மேல்முறையீடு செய்துள்ளார். அதன் நகலினை மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் மண்டலம் 2ன் உதவி ஆணையருக்கு சமர்ப்பித்துள்ளார். ஏனவே, கட்டிட உரிமையாளரின் மேல் முறையீட்டு விண்ணப்பத்தின் மீது அரசிடமிருந்து பெறப்படும் உத்திரவிற்கிணங்க உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''

**10.** இரண்டாம் எதிர்மனுதாரரான வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடத்தின் உரிமையாளர் திருமதி E.S. ஸ்ரீபிரியா என்பவர் சார்பாக அவரது கணவர் டாக்டர் எஸ். பாலாஜி என்பவர் **20.05.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி, கூடல் நகர், பாலமேடு மெயின் ரோடு, கதவு எண்.48ல் இருந்த நிலத்தினை எனது மனைவி திருமதி. E.S.ஸ்ரீபிரியா பெயரில் கிரையம் பெற்று அங்கு கட்டிடம் கட்டப்பட்டு வசந்தம் சூப்பர் மார்க்கெட் என்ற நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு உரிய வரிகளை மதுரை மாநகராட்சிக்கு செலுத்தி வருகிறேன்.

தற்போது மதுரைமாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தால் கள ஆய்வு செய்யப்பட்டது. கட்டிடத்தில் விதி மீறல் இருப்பதாக தாக்கீது வழங்கப்பட்டதால் சென்னை தலைமை செயலக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு Tamilnadu Town & Country Planning Act, 1971 பிரிவு 80 A-ன் கீழ் சீராய்வு மனு 08.05.2026 அன்று சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

**11.** முறையீட்டு மனுதாரரின் மனு, முதல் எதிர்மனுதாரர் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான டாக்டர் எஸ். பாலாஜி என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) கூடல் நகர் (சாந்தி நகர்) பாலமேடு மெயின்ரோடு கதவு எண் 48ல் உள்ள வசந்தம் சூப்பர் மார்க்கெட் (Vasantham Hyper Mart) கட்டிடமானது தரைதளம் மற்றும் முதல் மாடியை கொண்ட இக்கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடமும், 10 அடிக்கும் மேற்பட்ட அரசு இடத்தை ஆக்கிரமிப்பு செய்தும் அவசரகால வழி (Emergency Exit) விடாமலும், அரசு விதிகளின்படி கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (setback spaces) விடாமலும் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமலும் (Parking spaces) கட்டப்பட்ட வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடமானது பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன் கீழ் வருவாய் துறையிடம் அனுமதி பெறாமலும் மற்றும் மேற்படி வசந்தம் சூப்பர் மார்க்கெட் (VASANTHAM HYPER MART) கட்டிடத்திற்கு, அரசாணை எண் 07

வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 10.1.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் நாள் 03.01.2017–ன் உத்தரவின்படி, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57ன் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கியும் மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறும் மேற்கண்ட விதிமீறிய கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பதும் மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகரட்சி, மண்டலம் 2, கூடல் நகர் வார்டு எண் 2, பாலமேடு மெயின்ரோடு கதவு எண் 48ல் அமைந்துள்ள வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3–ன் கீழ், அக்கட்டிடத்திற்கான அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு விதிகள் 2022–ன் கீழ் Form II கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டு 02.04.2026 அன்று இக்கட்டிடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில், மதுரை மாநகராட்சியிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் பெற்ற வரைபடத்திற்கு மாறுதலாகவும், கூடுதலாக தரைத் தளத்தில் 1336 சதுரடி மற்றும் மிட்லெவல் 2136 சதுர அடியும் கட்டப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டதால், 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும், கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56(2-A)-ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு விதிகள் 2022ன்–படி Form IV அறிவிப்பு வழங்கப்பட்ட து என்பதும், இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு மேல்முறையீடு செய்துள்ளதால், அதன் மீது அரசிடமிருந்து பெறப்படும் உத்திரவிற்கிணங்க உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி, கூடல் நகர், பாலமேடு மெயின் ரோடு, கதவு எண்.48ல் இருந்த நிலத்தினை தனது மனைவி திருமதி. E.S.ஸ்ரீபிரியா பெயரில் கிரையம் பெற்று அங்கு கட்டிடம் கட்டப்பட்டு வசந்தம் சூப்பர் மார்கெட் என்ற நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்ட இக்கட்டிடத்தினை மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, இக்கட்டிடத்தில் விதி மீறல் இருப்பதாக தாக்கீது வழங்கப்பட்டதால் சென்னை தலைமை செயலக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு Tamilnadu Town & Country Planning Act, 1971 பிரிவு 80 A-ன் கீழ் மேல்முறையீடு மனு சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்பது இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான அவரது கணவர் டாக்டர் எஸ். பாலாஜி என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, கூடல் நகர் வார்டு எண் 2, பாலமேடு மெயின்ரோடு கதவு எண் 48ல் அமைந்துள்ள வசந்தம் சூப்பர் மார்க்கெட் கட்டிடமானது கட்டிட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடம் குறித்து மேற்கண்ட கட்டிடத்தின் உரிமையாளர் சென்னை, தலைமைச் செயலக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறைக்கு மேல்முறையீடு செய்துள்ளதால், அம்மனு மீது அரசிடமிருந்து பெறப்படும் உத்தரவிற்கிணங்க உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு,

அரசிடமிருந்து பெறப்படும் உத்திரவிற்கிணங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்துமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து, இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம்–2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி, மதுரை–625 007.

(4) திருமதி E.S. ஸ்ரீபிரியா,
கட்டிட உரிமையாளர், (வசந்தம் சூப்பர் மார்க்கெட்)
கதவு எண் 48, பாலமேடு மெயின் ரோடு,
கூடல் நகர் (சாந்தி நகர்), மதுரை.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/6/26
செயலாளர்.